1974 ஏப்ரல் 15]

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருந்து, நீண்டநாட்களாக அந்தப் பகுதியினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்தச் சாலை வேலை இப்போது துவங்கப்பட்டு இருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் உள்ள நிலைமையைக் கருதி, இன்னும் ஆங்காங்கு விடப்பட்டிருக்கும் அந்தப் பகுதிகளையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியையும் இணைத்து அந்தப் பகுதிகளுக்கும் கப்பிச் சாலையாக அமைத்திட அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நிதிப் பற்றாக்குறை காரணமாக உடனடியாக எடுத்துக்கொள்ள இயலவில்லை.

திரு. க. மு. இராசகோபால்: தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையிலே கொடுக்கப்பட்டிருக்கிற பணம் போதாத காரணத்தினால் பல இடங்களில் இருக்கின்ற நகர்ப்புறங்களை இணைக்கின்ற பாதைகள், தாம்போதிகள் இன்னும் சரிவர கட்டப்படாமல் சிற்றூர்களெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் பொதுப் பணித் துறையில் எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு நம்முடைய உள்ளாட்சித் துறை சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சிபார்சு செய்வதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எடுத்துக்கொள்ளத்தான் ஆட்சேபணை.

அய்யாவையனாற்றின் குறுக்கே பாலம்

*833 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் கொற்கை பஞ்சாயத்தினையும், தாழஞ்சேரி பஞ்சாயத்தினையும் இணைக்க அய்யாவையனாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் வேலை எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ்வேலையைச் செயலாக்கும் நிலை ஆரம்பக் கட்டத்தில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: கொற்கை, தாழஞ்சேரி பஞ்சாயத்துக்களை இணைக்கின்ற அய்யாவையனாற்றுக்குக் குறுக்கே கட்டப்படும் பாலத்திற்கு இரண்டு முறைகள் டெண்டர் கோரப்பட்டும் இதுவரையில் டெண்டர் கேட்பவர்களிடமிருந்து டெண்டர் வராத நிலையை நான் உணர்கிறேன். எனவே, அதற்கு டிபார்ட்மெண்ட் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு முறையிலோ அந்தப் பாலத்தினைக் கட்டி முடிப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

1974 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னை யிலிருந்து திண்டுக்கல் வழியாக 11 விரைவு பேருந்துகள் ஏற்கனவே சென்று வருகின்றன. திண்டுக்கல்லில் இறங்கி கம்பம் போவதற்கு நிறைய பேருந்து வசதி இருக்கிறது. ஆகவே தற்பொழுது விரைவுப் பேருந்து நேரடியாக விடும் உத்தேசம் எதுவுமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : பேரூர்களை இணைப்பதற்கு சென்னை நகரிலிருந்து நெடுந்தூர பஸ்களை விடுவது எந்த அடிப்படையில்? வழித் தடங்கள் பொறுக்கப்படுவது வசூலை முன்னிலையாக வைத்துப் பொறுக்கப் படுகிறதா? அல்லது மக்களுடைய வசதிகளை முன்னிலையாக வைத்துப் பொறுக்கப்படுகிறதா? அப்படியானால் இதுவரையில் விண்ணப்பம் செய்யப் பட்டுள்ள நெடுந்தூர தடங்கள் பற்றி அரசு எடுத்துள்ள முடிவு என்ன என்பதை நான் அறியலாமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தர ஏதுவாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னை-கம்பம் துரித பஸ் ஏற்பாடு இருக்கிறதே, ஏற்கனவே சென்னையிலிருந்து பழனிக்கு இம்மாதிரி துரித பஸ் போகிறது. கம்பத்திற்குச் செல்வதற்கு இடையிலே இருக்கக்கூடிய தேனி போன்ற இடங்களுக்கு லாபகரமாகப் போகும் என்பது மாத்திரமல்ல, அந்தப் பகுதியிலிருப்பவர்கள் மதுரைக்கு வந்து பஸ்களில் ஏறிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். இது சம்பந்தமாக அரசு மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்பொழுது அத்தகைய உத்தேசம் இல்லை.

திரு. பெ. சீனிவாசன் : இந்தக் கம்பம் பள்ளத்தாக்கு ஏரியாவில் நிறைய ஊர்கள் இருக்கின்றன. பெரிய முனிசிபல் டவுன்கள் ஏராளமாக இருக்கின்றன. சென்னையிலிருந்து பஸ் விட முடியாவிட்டாலும், திண்டுக்கல்லிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ், மதுரையிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ், ராஜபாளையத்திலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ் இப்படி அடிக்கடி எக்ஸ்பிரஸ் பஸ் விடுகிற நிலைமையில் குறுகிய தூர எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் வேண்டிய ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது அரசு போக்குவரத்துத் துறை இலாகா சம்பந்தமான கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.